DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | தினேஷ் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்**.)**

சிங்களாந்தபுரத்தில் எனது தாய்மாமா பச்சமுத்துவின் வீடு உள்ளது. நான் அங்கு இருந்து புதுச்சத்திரத்தில் உள்ள சத்துமாவு மில்லுக்கு வேலைக்கு சென்று வந்துகொண்டிருந்தேன். எனது அண்ணன் சந்திரபாபுவின் மனைவி காமாட்சிக்கு பெண் குழந்தை பிறந்து கடந்த 13.10.2024ம் தேதி எனது அண்ணனுக்கும் அவரது மச்சனன் ஆஜர் எதிரி பசுபதிக்கும் போன் மூலமாக சண்டை வந்தது. 07.11.2024ம் தேதி மாலை 03.10 – 03.15 மணியளவில் திருவிழாவை முன்னிட்டு நானும் எனது அண்ணன் சந்திரபாபு மற்றும் எனது மாமா பச்சமுத்து ஆகியோர் சிங்களாந்தபுரத்தில் உள்ள எனது சின்னம்மா பேபியின் வீட்டில் இருந்தபோது பக்கத்துவீட்டில் இருந்த ஆஜர் எதிரி பசுபதி அங்கு வந்து என்னையும் எனது அண்ணனையும் பார்த்து எனது அக்காவை ஏன்டா

வீட்டிற்கு அனுப்ப மாட்டிக்கிறிங்க தேவடியா பசங்களா என ஆபாச வார்த்தைகளால் திட்டி ஆஜர் எதிரி எனது அண்ணன் சந்திரபாபுவை கையால் கன்னத்தில் அரைந்தார். அதை நான் தடுக்க சென்றபோது ஆஜர் எதிரி தனது வேட்டியில் மறைத்து வைத்திருந்த பட்டன் கத்தியை எடுத்து எனது அண்ணனை குத்த சென்றார் நான் தடுக்க சென்றதால் எனது இடதுபுற வயிற்றில் கத்தியால் கிழித்துவிட்டார். பின்பு அருகில் இருந்தவார்கள் அங்கு வந்தவுடன் இன்னைக்கு நீங்க தப்பிச்சுடீங்க என்னைக்கு இருந்தாலும் உன்னையும் உனது அண்ணனையும் குத்தாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்து என்னை குத்திய கத்தியை எடுத்து சென்றுவிட்டார்.

பின்பு எனது அண்ணாவும் எனது சித்தியும் என்னை சிங்களாந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு முதல் உதவி சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். பின்பு மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கு நான் சுமார் 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் அங்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். (சாட்சி சாட்சியம் அளிக்கும்போது அழுதுகொண்டே சாட்சியம் அளித்தார்.)

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 13.10.2024ம் தேதி எனது அண்ணனும் ஆஜர் எதிரியும் சண்டை போட்டது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது அண்ணன் என்னிடம் கூறினார். 07.11.2024ம் தேதி திருவிழாவிற்கு யார் வீட்டிற்கு நான் சென்றேன் என்றால் நான் எனது சித்தி வீட்டில் இருந்தேன். சம்பவத்தன்று பக்கத்து வீட்டில் ஆஜர் எதிரி எதற்காக வந்திருந்தார் என்றால் அங்கு பக்கத்தில் இருந்த மனோஜ் என்பவரது வீட்டிற்கு விசேஷத்திற்காக விருந்தினராக வந்திருந்தார்.

ஆஜர் எதிரி என்னை எந்த எந்த தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றால் தேவடியா பசங்களா, கண்டார ஓழி பசங்களே வாங்கடா பார்த்துக்களாம் என திட்டினார். ஆஜர் எதிரியை நான் தகாத வார்த்தைகளால் திட்டினேனா என்றால் இல்லை நான்

தடுக்கத்தான் சென்றேன். அப்போது எங்கள் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னை கத்தியால் குத்தவில்லை என்றாலும் எனது அண்ணன் தான் கத்தியை எடுத்து வந்தார் என்றாலும் சண்டையில் எனது அண்ணன் வைத்திருந்த கத்தியால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி கத்தியை எடுத்து வரவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி கத்தியை எடுத்து வரவில்லை என்றாலும் அதனால் அவர் கத்தி எதையும் எடுத்து சென்றிருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**